# பிறன்மனை நயத்தல் : திருக்குறள்- திருமந்திரம்

54

**முனைவர் முருகு தயாநிதி**
**இயக்குநர்**
**தமிழ்மொழித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.**
muruguthayanithy@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பிறர்மனை நயத்தல் என்ற தலைப்பில் ஆராயப்படும் இக்கட்டுரையானது திருக்குறளையும் திருமந்திரத்தையும் அடிப்படையாக்கொண்டு முன்வைக்கப்படுகின்றது. திருமூலருடைய திருமந்திரமும் திருவள்ளுவருடைய திருக்குறளும் நாடு, மொழி, இனம் முதலிய எல்லை கடந்து பேசப்படுகின்றன. இவ்வாறு பேசப்படும் உலகப்பொருண்மை நிறைந்த படைப்புகள் இரண்டும் மனித இனத்தின் மேன்மையினை வலுப்படுத்தும் தன்மையில்.பிறர்மனை நயத்தல் என்ற விடயத்தினை ஒரு மனிதன் கைவிடும்போது, அவன் உலகை வென்றவனாகின்றான் என்பதனை முன்வைக்கின்றன. எல்லாச் செல்வங்களும் கிடைக்கின்றபோதும் பிறர்மனை நயத்தலால் வரும் பழி அவனை இந்த உலகில் இருந்து அகற்றிவிடும் என்பதனைப் பல இலக்கியங்களும் சித்தர் பாடல்களும் விளக்கி நிற்கின்றன. எனவேதான், திருக்குறளும் திருமந்திரமும் காட்டும் பொருண்மையும் மனித வாழ்வின் உயர்ச்சியினை மையமாக்கொண்டு இடம்பெறுகின்றமையினை நோக்கமாகக்கொண்டு இக்கட்டுரை ஆராய்கின்றது. இதுவரை காலத்திலும் இவ்வாறான தலைப்புக்களில் கட்டுரை இடம்பெற்றபோதிலும் அவற்றினை முன்கொண்டு சென்றவித்தில் இடைவெளிகாணப்படவே செய்கின்றது. எனவேதான், திருவள்ளுவர், திருமூலரது காலங்களில் பிறர்மனை நயத்தல் என்பது எவ்வாறு இருந்திருக்கும் என்பதனை ஊகிக்கமுடிகின்றது. ஆய்வின் எல்லை கருதி இந்த இரண்டு இலக்கியங்களும் ஒப்பீட்டு அடிப்படையிலும் வரலாற்றுப் பார்வையிலும் முன்வைக்கப்பட்டுகின்றன. ஆய்வின் வலுவளவினை மேற்கிழம்பச் செய்வதற்காக ஏனைய சித்தர்களின் பாடல்களும் இலக்கியங்களின் உள்ளீடுகளும் உதாரணத்திற்குக் காட்டுப்படுகின்றன.

**திறவுசொற்கள் :** திருக்குறள் – திருமந்திரம் - பிறன்மனை நயத்தல் -மனிதவாழ்வு

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழர்களுடைய இருப்பிலும் மேலெழுகின்ற பல்வேறு இலக்கியங்கள் உண்டு. அந்த இலக்கியங்கள் யாவும் எப்போது எழுந்தது என்பதிலும் பார்க்க, அவை என்ன விடயங்களைக்கூறுகின்றன என்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக

கி.பி.3ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தினைச் சங்ககாலம் என்பர். கி.பி.3 நூற்றாண்டுக்கு முன்னர் பல்வேறு இலக்கியங்கள் எழுந்திருந்தபோதும், அவை வாய்மொழித்தன்மையிலே குவியமாகின. இவ்இலக்கியங்கள் சங்காக்லத்தில் எழுத்துவடிவம் பெற்றதோடு அவை பதிணென் மேற்கணக்கு நூல்கள் என்ற நிலையில் பேசப்படுகின்றன. தொடர்ந்து சங்கமருவிய காலத்தில் (கி.பி.3-6) பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுக்கப்படுகின்றன. இத்தொகுப்பில் திருக்குறள் பிரதான அறநூலாக மேலெழுகின்றன. இவ்வாறு பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் காலத்தில் திருமூலரும் தோற்றம்பெறுகின்றார். இவருடைய காலத்தினை கி.பி.5ஆம் நூற்றாண்டு என்று கொள்வர். ஆனால், அவர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பதனை திருமந்திரம் காட்டுகின்றது. அவ்வாறெனின், பல காலங்களில் அவர் பிறப்பெடுத்திருக்கலாம். எது எவ்வாறெனினும், அவர் இயற்றிய திருமந்திரம், சோழர் காலத்தில் நம்பியாண்டா நம்பியினால் தொகுக்கப்பட்டு, பத்தாம் திருமுறையில் வைக்கப்படுகின்றது.

**நூல்களின் காலம்**

திருக்குறளுத் திருமந்திரமும் எழுந்த காலத்தில் தொகுக்கப்படாதவை என்பது தெரியவருகின்றது. திருவள்ளுவருடைய காலம் கி.மு.5 நூற்றாண்டு என்று காட்டும் ஆய்வாளர்களும் உளர்.ஆனால், அந்த நூல் சங்கமருவிய காலத்தில் தொகுக்கப்பட்டு அறநூல்களின் பட்டியலில் வைக்கப்படுகின்றது. திருமூலர். கி.பி.5ஆம் நூற்றாண்டில் தோன்றியவர் என்றபோதிலும், அவர் பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர் என்பதனை அவருடைய பாடல்வழி கண்டுகொள்ளமுடிகின்றது.எனினும், திருமந்திரம் சோழர்காலத்தில் தொகுக்கப்பட்டு பத்தாம் திருமுறையில் வைக்கப்படுகின்றது. எனவே, எழுந்த காலத்தின் அடிப்படையில் நோக்குவோமாக இருந்தால், திருவள்ளுவர் காலத்திலும் அதற்கு முன்னரும் பிறன்மனை நயத்தல் என்பது காணப்படவே செய்திருக்கின்றது. அதனால் அவர், பிறன் இல் விழையாமை என்ற அதிகாரத்தில் நேரடியாகவே கண்டனம் செய்கின்றார். ஆனால்,திருமூலம் பிறர்மனை நயவாமை என்று மூன்று பாடல்களால் ஆலோசனை கூறிக் கண்டிகின்றார். அதாவது, திருவள்ளுவரும் திருமூலரும் வாழ்ந்த காலத்தின் அடிப்படையில் கையாளப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் அவற்றினை காலநிர்ணயம்செய்கின்றன. எனவே, இவர்கள் இருவரும் வாழ்ந்த காலம் இதுவரை வரையறைக்குட்படுத்தப்படாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றன.

**சித்தர்கள்**

தமிழகத்தில் சித்தர் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாழ்ந்தாலும், சித்தர்களில் முதன்மையானவராகச் சிவபெருமான் கொள்ளப்படுவதோடு, தமிழ்ப்புலவர் சரிதமும்

அவரிடமிருந்தே ஆரம்பமாகின்றது என்பர். குமரிக் கண்டத்தில், தென்மதுரையில் இருந்த முதற்சங்கத்தில் 549 புலவர்கள் இருந்தனர் என்றும், அதில் அகத்தியர், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், கன்றெறிந்த குமரவேள், முரஞ்சியுர்முடி நாகநாகராயர்,நிதியின்கிழவன் முதலிய புலவர்கள் இருந்ததோடு, அகத்தியர் இடைச் சங்கப்புலவராகவும் இருந்திருக்கின்றார் என்பதனை இறையனார் களவியலுரை அடையாளப்படுத்துகின்றது.. முதற்சங்கம் 4440 ஆண்டுகளும் இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும் கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் நடைபெற்றிருக்கின்றன. எனவே, இச்சங்கத்தில் இருந்த புலவர்களுள் அகத்தியரே முதல் சித்தராக்கொள்ளப்படுகின்றார். எனினும், தமிழ்ச் சித்தர் பரம்பரையின் தவைவராக்கொள்ளப்படுபவர் திருமூலரேயாவார். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டாகும். இவ்வாறு நோக்கும்போது பதினென் சித்தர்காளக்கொள்ளப்படுகின்ற பதினெட்டுச் சித்தர்களும் சித்தர்களாகக்கொள்ளப்படும் நூற்றுக்கு மேற்பட்டவர்களும் இக்காலத்தினைத் தொடர்ந்தே தோன்றியிருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவே, சித்தர்கள், பொதுவாழ்க்கை நெறிக்குள் நின்றுவிடாது தங்களுக்கான தனிவாழ்வியல்நெறியினை உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் அனைத்தினையும் கடந்து இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து, உலகாயுத இயல்புகளை சிறப்பாக அறிந்து, அதனை முன்கொண்டு சென்றனர். குறிப்பாகச் சாதி, சமயச் சடங்குகளைக் கடந்து, சமூகத்தில் பயனுடையவை எவை என்பதனைப் பிரித்தறிந்து, சமூதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மாற்றக்கருதிய சீர்திருத்தவாதிகளாகவும் வாழ்ந்தனர். எனவேதான் பரமாத்மா எங்கும் தனியாக இல்லை. அது உபநிடதம் கூறுவதுபோன்று ஆத்மாவே பிரம்மமாக நிற்கின்றது என்ற கோட்பாட்டுக்கு எற்றாப்போல், நமது உடம்புதான் பரமாத்மாவின் இடம் என்பதனை தங்கள் பாடல்களில் பதிவுசெய்தனர்.

**"உன்னுள்ளும் இருப்பான் என்னுள்ளும் இருப்பான்**
**உருவம் இல்லா உண்மை அவன்.**
**இதை உணர்ந்தார் இங்கே உலவுவதில்லை**
**தானும் அடைவார் அந்நிலை தன்னை."      (சித்தர் பாடல் 116)**

**பெண்கள்**

பெண்களின் உயரிய தன்மையினை முன்வைப்பதில் சித்தர் இலக்கியங்கள் பின்நிற்கவில்லை. அதேபோல் தமிழர் வரலாற்றில் பெண்களை உயர்த்திப் பேசுகின்ற நிலையில் இராமாயணம், மகாபாரதம் என்பன பல்வேறு விடயங்களைக் காட்டுகின்றன. இராமாயண, பாரத கலாசாரம் முழுதாக அழிக்கப்பட்டு புதிய சமூகமரபொன்று ஏற்படுத்தப்படும் அளவுக்குப் பெண்கள் நிலை (கற்பு) மேலோங்கி இருந்தது. சீதை, திரௌபதி, காந்தாரி என்று பெண்கள் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றார்கள். குறிப்பாக முப்பத்தியாறு வருடத்தில்

துவாரகை அழியும் என்றும் கிருஷ்ணன் கொல்லப்படுவான் என்றும் காந்தாரி சாபம் இடும் அளவுக்கு அவளுடைய கற்பு குவியமாகியது. இவ்வாறு சீதையினை முறைதவறிய வித்தில் கையாண்டமையினால் இராவணன் குலத்துடன் அழிக்கப்படுவதோடு, இலங்கை நாடும் கைப்பற்றப்படுகின்றது. மகாபாரத்தில், திரௌபதிக்கு ஏற்பட்ட பின்னடைவும் இழப்பும் அந்தக் கலசாரத்தினையே மாற்றியமைக்கின்றது. அதாவது, நானூறுவருடகாலமாக இருந்த அஸ்தினாபுர ஆட்சி முடிவுக்குக்கொண்டுவரப்படுகின்றது. கண்ணகி, மாதவி, பாண்டிமாதேவி ஆகிய பெண்கள் சிலப்பதிகாரத்தில் மேலெழுகின்றனர். மாதவியுடன் ஏற்பட்ட நட்பினால் உருவான செயலொழுங்கில் சிலம்பு குறியீடாக்கொள்ளப்பட்டு பாண்டிநகரே தீக்கிரையாகின்றது. இலங்கையில், கண்டிக்கு அரசனாகிய கண்ணுசாமி அல்லது ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பூசனியாள் என்ற பெண்ணைத் தகாத உறவுக்கு அழைத்தபோது கண்டி ஆங்கிலேயரால் கைப்பற்றப்படுகின்றது. இவ்வாறாகப் பல்வேறு காலங்களில் பெண்கள் பாதிப்புக்குள்ளாகும்போது அல்லது பிறர்மனை நயத்தல் என்ற கூடா ஒழுக்கம் மேலோங்கியபோது, அது, ஒரு சமூகத்தின் இருப்பினை இல்லாமல் செய்வதோடு, தனிமனிதனையும் அழித்துவிடுகின்றது.

சித்தர்கள் பாடிய பாடல்கள் யாவும் சமூக சீர்திருத்தக்கருத்தினையே முன்வைத்து நின்றன. அவற்றுள் பெண்களை உயர்த்திப்பாடிய பாடல்கள் பலவாக அமைகின்றன. பொதுவாக பிறர்மனை நயத்தல் என்ற பொருண்மையினை அவர்கள் கண்டிக்கத் தவறவில்லை. இதற்காக அவர்கள் பல்வேறு நிலைகளில் உடம்பு நிலையில்லாதது. அதனை நாம் தேவையற்றவித்தில் நாடுகின்றோம். அது தவிர்க்கப்படவேண்டும் என்று தங்கள் ஆதங்கத்தினை முன்வைக்கின்றனர். இதனை நாம் நேரடியாகப்பொருள்கொண்டால் அது தவறுபோலத் தோன்றும். அதன் கருத்தினை ஆழமாக ஆராய்ந்தால் அவற்றின் உண்மை எமக்குப் புலப்படும் என்பதனை பாம்பாட்டிச் சித்தர் பாடல்களின் வழி உணரமுடியும். அவருடைய பாடல்கள் யாவும் பெண்ணாசையில் இருந்துவிடுபடவேண்டும் என்ற கருத்துரைப்பிலே குவியமாகின்றன.

**“வட்டமுலை யென்றுமிக வற்றுந் தோலை**
**மகமேரு என்றுவமை வைத்துக் கூறுவார்**
**கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில் வீழ்ந்தோர்**
**கெடுவரென்றே நீதுணிந் தாடாய் பாம்பே.”**

**(பாம்பாட்டிச் சித்தர் பாடல் 51)**

இது இவ்வாறிருக்க பட்டினத்தார் பெண்மையினை நேரடியாகப்போற்றி, அதில் அவரும் உடல் நிலையில்லாதது, நெருப்பில் வேகும்போது அது அழிந்துவிடுகின்றது. அவ்வாறாயின் அழியாதது புகழ் என்பதனைப் பதிவுசெய்கின்றார். கந்தபுராணத்தில் கூட சூரம் ஒரு சந்தர்ப்பத்தில் உடல் அழியும் ஆனால், அழியாதது புகழ் மட்டுமே என்கின்றான். இத்தகைய தன்மையினைத் தனது தாய் இறந்தபோது பட்டினத்தார் அந்த மனக்கிடக்கையினை முன்வைக்கின்றார்.

**“ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்**
**பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு**
**கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை**
**எப்பிறப்பில் காண்பேன் இனி?”**

**(பட்டினத்தார் பாடல் 1)**

**பிறன்மனை நயத்தல்**

இல்லாழ்வில் ஈடுபட்டோர் அவரவர் மனைவியுடன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதும் பிறன் மனைவியை விரும்பலாகாது என்பதும் தமிழர்கோட்பாடு.அத்தகைய உன்னத அறநெறியே நமது செம்மாந்தமரபு. எனினும் சங்ககாலத்தில் பரத்தையர் ஒழுக்கம் இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், திருமணமான பெண்னை கணவனல்லாத இன்னொருவன் விரும்புவது என்ற அநாகரியம் குற்றமாக் கருதப்பட்டதே அன்றி, அது வழக்கமாக்கொள்ளப்படவில்லை.சங்ககாலப் பெண்கள் ஒரே கணவனுடன்வாழ்ந்தனர். ஆனால், ஆண்கள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அவர்கள் பரத்தையரை நாடினார்கள். எனவேதான் பிறன் மனை நயத்தல் என்பது இளமை செய்யும் குறும்பு; அது காமத்தின் அரும்பு; அது கொடிது; கடிது; வெவ்விது; எதனாலும் அடக்க இயலாது; அம்பும், நெருப்பும், காய் கதிரும் புறத்தைச் சுடும்! காமம் அகத்தைச் சுடும் ஆற்றல் மிக்கது. அதனால் நெருப்பினும் காம விருப்பு மிகுதியும் அஞ்சத்தக்கது என்று நாலடியார் பதிவுசெய்கின்றது. எனவே, பிறன்மனை நயக்தல் என்ற பொருண்மையினை திருவள்ளுவரும் திருமூலரும் பார்க்கும் விதம் கண்டிப்பாக இருந்தபோதும் திருவள்ளுவர் நேரடியாகவே கண்டிக்கின்றார், ஆனால், திருமூலம் ஆலோசனைகூறிக் கண்டிகின்றார். இன்றைய கல்வி உலகில் ஆலோசனைகூறிக் கண்டிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டலாகவும் இருக்கின்றது.

**திருக்குறள்**

பிறர்மனை நயத்தில் என்ற அறத்திற்கு மாறான செயற்பாட்டினை பிறன் இல் விழையாமை என்ற அதிகாரத்தில் காட்டுகின்றார். பெரும்பாலான குறள்கள் கண்டிப்பை மையமாக்கொண்டே மேலெழுகின்றன. அவ்வாறான தன்மையில் இந்த அதிகாரத்தில் வரும் குற்கள் யாவும் கண்டிப்பினையே மையப்படுத்துகின்றன. அறமும் பொருளும் நிலைக்கவேண்டுமாக இருந்தால் அடுத்தவன் மனைவிமீது ஆசைவைத்தலையோ, விரும்புதலையோ ஏன் கனவிலும்கூட நினைக்க்கூடாது. இந்த இரண்டையும் ஆராய்ந்து நடப்பவர்கிடம் இவை இராது என்கின்றார்.

**“பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமைஞாலத்து**
**அறம்பொருள் கண்டார்கண் இல்”** **(குறள் 141)**

முறை தவறிய நிலையில், அறமும் பொருளும் இழக்கின்ற மனிதன் இன்பத்தினையும் தானாக இழந்துவிடுவான். அதாவது, அறத்தின் எல்லையினைக் கடந்துசென்று, பிறருடைய மனைவியை நாடுகின்றவன் மூடன். அவ்வாறு செல்லும்போது இன்பத்தினையும் இழக்கின்றான். இங்கு அவனுக்குப் பயம் இயல்பாகவே உண்டாகின்றது. அதனால், இன்பம் எவ்வாறு வரும் என்கின்றார்.

**"அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை**
**நின்றாரின் பேதையர் இல்"** **(குறள் 142)**

உடலுறவு என்பது முற்றிலும் இன்பம் சார்ந்தது. அவ்வாறான நிலையில் பயம் உண்டாகும்போது அது எவ்வாறு சாத்தியமாகும். நாமே நம்மை பிழையான வழியில் கொண்டுசெல்கின்றோம். இதனை நாலடியார் இவ்வாறு குறிப்பிடகின்றது. போகும்போது பயம் உண்டாகின்றது. மீண்டும் வரும்போதும் பயம், பிறரிடம் அகப்படாமல் இருக்கும் வரைப் பயம், எப்போதுமே பயம். அவ்வாறாயின் அந்த உடலுறவு (கள்ள) எதற்கு?

**"புக்கவிடத்துஅச்சம் போதரும் போதுஅச்சம்**
**துய்க்குமிடத்து அச்சந் தோன்றாமல் காப்பச்சம்**
**எக்காலும் அச்சந் தருமால் எவன்கொலோ**
**உட்கான் பிறனில் புகல்"** **(நாலடியார் 83)**

காமம் மேலோங்கும்போது உயரிய சிந்தனை கீழ்நோக்கி உந்தப்படுகின்றது. அதனால் நம்பிக்கைத்துரோகம் இடம்பெறுகின்றது. அதில் ஆபத்தானது நண்பனது மனைவியினை காமுறுவதாகும். இவ்வாறு நடப்பவர்கள் மனித இனத்திற்குள் அடங்காதக, மனிதவடிவில் நடமாடும் பிணங்கள் என்பதனை எடுத்துரைக்கின்றார். இதனால் அவர்கள் பெருமையினையும் சிறப்பினையும் இழந்துவிடுகின்றனர். எனவே, புறப்பகைகளை அடக்கு ஆண்மை உடையவர்கள் உட்பகையாகிய காமத்தினை அடக்கியே ஆகவேண்டும். அவ்வாறு அடக்கிவாழ்பவன் பேராணந்தமுடையவனாகின்றான். காமம் மேலோங்குமாக இருந்தால், இந்திரன் ஒரு பொழுது எல்லாப் பொருளையும் இழந்தது போன்று இழக்க நேரிடும்.

**"விளிந்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தாரில்**
**திமை புரிந்து ஒழுகுவார்"** **(குறள் 143)**

**"எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறனில் புகல்"** **(குறள் 144)**

**"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோஆன்ற ஒழுக்கு" (குறள் 148)**

வள்ளுவர் அறத்தினையும் பிறர்மனை நயத்தலையும் ஒருங்குசேரப் பார்க்கின்றார். இவை இரண்டும் ஒன்றில் இருந்து ஒன்று குறைவுடையது அல்ல என்பதனை புரிந்துகொண்டார். ஆனாலும், உலகிலே முதன்மையானதும் மேலானதுமான அறவழியில் நடப்பவர்கள்சிலவேளைகளில் சிலர், அறத்தின் எல்லையினைக் கடந்து செயலாற்றுவது வழக்கம் என்றபோதும் அவ்வாறானவர்கள் தீயவர்கள் என்றே கணிக்கின்றார்.எனினும், வள்ளுவர் அதிலும் மேலானதாக பிறர்மனை நயத்தலினைக் குறிப்பிடுகின்றார். அதாவது, ஒருவர் அறத்தின் எல்லையைத்தாண்டி ஒரு விடயத்தினை நிறைவேற்றினாலும் அதற்குச் சிலவேளை மன்னிப்பு உண்டு. ஆனால், மாற்றான் உரிமைக்கு உட்பட்டஒருத்தியின் பெண்மையினை விரும்புதலை ஒருநாளும் செய்யக்கூடாது என்றார்.

**"அறன் வரையான் அல்ல செயினும் பிறன் வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று" (குறள் 150)**

எனவே, பிறர் மனைவியை இச்சிப்பவன் பகைமையைப்பெறுவான், பாவத்தைத் தேடிக்கொள்வான், அச்சத்தால் அழிவான், பழியையும் சுமப்பான் என்று உறுதிபடக்கூறுகின்றார். இதனை நாலடியார் தருமத்தினையும், கீர்த்தியினையும், சினேகத்தினையும் கௌரவத்தினையும் இழந்துவிடுவான் என்கின்றது.பதிலாக பகையும் பழியும் பாவமும அச்சமும் வந்து செரும் என்கின்றது.

**"பகைபாவம் அச்சம் பழி நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண்" (குறள் 146)**

**"அறம்புகழ் கேண்மை பெருமை இந் நான்கும்**
**பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா – பிறன்தாரம்**
**நச்சுவார்ச் சேரும் பகை பழி பாவமென்று**
**அச்சத்தோடு இந்நாற் பொருள்" (நாலடியார் 82)**

**திருமந்திரம்**

சைவசித்தாந்த்தின் முதல் நூலாக் கருதப்படும் திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது. இதனைத் தமிழ் ஆகமநூல் என்று அழைப்பர். ஒன்பது தந்திரங்களைக்கொண்ட இந்நூலில் முதலாவது தந்திரத்தில் பிறன்மனை நயவாமை அமையப்பெறுகின்றது.

திருமூலருடைய 3000 பாடல்களில் மூன்று பாடல்களினால் இந்த பொருண்மையினைச் சிறப்பாக உதாரணத்துடன் முன்வைக்கின்றார். அதாவது,காமம் மேலோங்கப்பெற்றோர் மனைவியினை விடுத்து பிறமனையாளை நாடுகின்றவர்கள், காமத்தோடு களவு எனும் குற்றத்திற்கும் ஆளாகின்றனர். இதனால், இவர்கள் மக்கட்பண்பு இல்தவர்களாக் காணப்படுவதோடு எருதுபோன்ற தோற்றமுடையவர்களாகவும் அல்லது அதன் குணம் உடையவர்களாகவும் இருப்பர். இதனை விளக்க பலாப்பழத்தினையும் ஈச்சம் பழத்தினையும் உதாரணம் காட்டுகின்றார். இந்த இரண்டு பழங்களுள் பலாப்பழம், முக்கனிகளில் சிறப்படையது மட்டுமன்றி உருவத்தில் பெரிதாகவும் இருக்கும். ஈச்சம் பழமோ மிகவும் சிறியது மட்டுமன்றி முட்களின் நடுவிலே காணப்படுவது. எனவே, இங்கு உருவம் என்ற நிலையில் மனைவி பழாப்பழம் போன்ற உருவத்தின் தன்மையில் காணப்படுகின்றாள். அப்பழத்தினை நாவார, வயிரார உண்ணமுடியும். தேவையானபோதெல்லாம் உண்ணலாம். இவ்வாறான பழாப்பழம் போன்ற அவளுடைய குணம் இல்லாளுக்குரிய தன்மையில் இருக்கும். அதனை அவள் எப்போதும் கணவனுக்காக விட்டுத்தருவாள். விரும்பியபோது அவளை அவன் பயன்படுத்தமுடியும். இங்கு அச்சமோ, பயமோ, இழிவான செயற்பாடோ எதுவும் இடம்பெறமாட்டாது. குடும்பசுதந்திரப்படி அந்தந்தச் செயற்பாடுகள் இடம்பெறும். ஆனால், உருவத்தில் சிறியபழமான ஈச்சம் பழம் குணத்திலும் சிறுமைகொண்டதே. அத்தகைய பழத்தினைப் பெறுவதென்பது கடினமானது. இப்பழம் முட்களுக்குள் இருப்பதுபோன்று, பல காவலுள்ள பிறன் மனையாளையும் அடையப் பல துன்பத்தையும் அனுபவிக்கவேண்டிவரும். அதனைக் கடந்துபோக நினைக்கும்போது பல சிக்கல்களையும் முரண்பாடுகளையும் சந்திக்கவேண்டிவரும். அவ்வாறு சென்றாலும் அதனை ஏறிப் பறித்தல் என்பதுகூட சாதாரணவிடயம் அல்ல. இதற்காகப் பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்குச் செலவுசெய்யும் நேரமோ அதிகமானதும் தேவையற்றதும். உண்ணக்கூடிய பழம் வீட்டில் இருக்கும்போது இப்பழம் எதற்கு? இத்தகைய பழங்களைத் தவிர்த்தல் வேண்டும். அதாவது, ஈச்சம்பழம்போன்ற பெண்களை நாடி சிறுமையடைவதனை தகாதகுணம் கொண்ட காளையர் (மாடு) விரும்பக்கூடாது. அவ்வாறு இடம்பெறுமாக இருந்தால் பழியும் கேடும் தானாகவே வந்து சேரும்.

**"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறுங் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே"** **(திருமந்திரம் 201)**

திருமூலர் அடுத்த பாடலில் மேலும் விளக்கம் தருகின்றார். இதற்காக அவர் இனிக்கும் மாங்கனியையும் புளிக்கும் புளியம்பழத்தினையும் காட்டுகின்றார். இங்கு இரண்டும் கனிதான். ஆனால், பிறர்மனை நயக்கும் ஒருவனுக்கு இந்த உதாரணம் காட்டப்படுகின்றது. தனது வாழ்வின்

மேம்பாட்டுக்காக இனிக்கும் மாம்பழத்தினைப் பெற்ற ஒருவன். அதனை அறையில் வைத்து பூட்டிவிட்டு, புளிக்கும் பழத்தைப் பெறுவதற்கு முயலுகின்றான். இதற்காக அவன் புளியங்கொப்பேறி, அதனைப் பறிக்கையில் கீழே விழுந்து, தமது காலை ஒடித்தக்கொள்கின்றான். இவ்வாறான எண்ணப்பாடுடையவர்கள் சிறிதும் யோசனை அற்றவர்கள். இங்கு இனிய மனைவி இருக்க, பொருத்தமற்ற பிறர் மனைவியை நாடினால் துன்பம் இயல்பாகவே வந்து சேரும். அதாவது, தேமாங்கனியாகிய மனைவியை அறையில்பூட்டிவைத்தால் அவளும் அழிந்து விடுவாள், புளியங்கிளையிலேறி காலை இழந்து அவனும் கெட்டுவிடுவான். எனவே, பிறர்மனை நயத்தாலள் ஒரு குடும்பமே அழிந்துவிடுகின்றமையினை திருமூலர் காட்டுகின்றார்.

**"திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை**
**அருத்தமென் றெண்ணி அறையில் புதைத்துப்**
**பொருத்தம் இலாத புளிமாங் கொம்பேறிக்**
**கருத்தறி யாதவர் காலற்ற வாறே"** **(திருமந்திரம் 202)**

இதனை விளக்கும் தன்மையில் சங்கப்பாடல் ஒன்றினை அவதானிக்கமுடியும். இப்பாடலில் தலைவியின் துன்பம் காட்டப்படுகின்றது. நெய்தல்நிலத்தலைவனோடு கூடி மகிழும்போது அவளுடைய தாமரை மலரைப் போன்ற கண்களும், மூங்கிலை ஒத்த சிறப்பான அழகிய தோளும், பிறை என்று கருதும்படிக் காண்போர் அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும், மிகவும் நல்லனவாக இருந்தன. ஆனால், தலைவன் பிரிந்துசென்றமையினால் அந்த நிலை இப்பொழுது கழிந்தது விட்டது. ஆனால், தூரத்தில் இருந்து பார்க்கின்றவர்களுக்கு அவளுடைய நிலை நாரையைப்போன்று காட்சியளிக்கின்றது. எனினும், அவள் தாழைமலர் என்பது மறைக்கப்படுகின்றது. எனவே, இங்கு பொருள்தேடச் சென்றபோது அவள் பசலைநோயினால் வாடி அழிந்துவிடுகின்றாள். அதுபோல், பலாப்பழமும் மாம்பழம்போன்ற மனைவியர் நிலையும் என்பதனை இங்கு அவதானிக்கமுடிகின்றது.

**"பூவொடு புரையுங் கண்ணும் வேயென**
**விறல்வனப் பெய்திய தோளும் பிறையென"** **(குறுந்தொகை 226)**

திருமூலர் மேலும் ஒரு விடயத்தினை நுட்பமாக் காட்டுகின்றார். பிறர் மனைவியை விரும்புகின்றவர்கள் தம்முடைய சிந்தனையினை மாற்றிக்கொள்ளமாட்டார்கள் அல்லது அதனை மாற்ற மிகவும் சிரமப்படுவார்கள். அதாவது, ஒருவன் செல்வச் செழிப்புடன் இருக்கின்றபோதும், பிறர்மனை நயக்கலின்வழி அவன் கீழ்மகனாகின்றான். இத்தகையவர்கள் ஒழுக்கம் இல்லாத பெண்டீரது மயக்கத்தில் வீழ்ந்து அல்லது அம்மயக்கத்தில் மாட்டிவிடுகின்றர். இன்று அறிவின் அளவு பற்றிப் பேசுகின்றவர்கள் கற்றது கைமண்ணளவு என்பர். சிலர் இதனை விடுத்து தனக்கு எல்லாம் தெரியும் என்பர். இதனை திருமூலம் "நம்முடைய அறிவின் அளவு என்பது இருட்டுக்குள்ளே ஒரு மின்னலின்போது தெரியும் காட்சி போன்றதுதான் என்கின்றார்.

இவ்வாறுதான் இருளில் மின்னொளியில் தெரிகின்ற பெண்டீரை பெரிதென்று எண்ணுகின்றனர். அனால், தன்னுடைய மனைவி தொடர்ந்து ஒளியைக்கொடுத்துக்கொண்டு இருக்கும்போது. மின்னலில் தெரியும் ஒளியையுடையவளான பிறன் மனைவியை நாடுவது அபாயமானது. இவ்வாறான குறைந்த அறிவுடையவர் பணத்தினை வைத்துக்கொண்டு மருட்சியான பெண்களின் மீது ஊடல்கொள்கின்றனர். இவ்வாறான கூடாவெழுக்கம், மின்னல் அடிப்பதுபோல், நமது பதவி, புகழ், குலம், கோத்திரம் இனம் யாவற்றையும் ஒருங்கே அழித்தவிடும் என்பதனை காளை ஒருவன் உணரவேண்டும்.

**“பொருள் கொண்ட கண்டனும் போதத்தை யாளும்**
**இருள் கொண்ட மின்வெளி கொண்டு நின்றோரும்**
**மருள் கொண்ட மாதர் மயல் உறுவார்கள்**
**மருள் கொண்ட சிந்தையை மாற்றகில்லாரே”** **(திருமந்திரம் 203)**

**முடிவு**

திருக்குறள், திருமந்திரம் என்பன மனிதவிழுமியத்தினை முன்வைப்பதில் குவியமாகின்றன. இந்த இலக்கியங்கள் இரண்டும் எழுந்த காலம் பற்றியோ அதனைப்படைத்த படைப்பாளர்களின் காலம் பற்றியோ சரியான தகவல்கள் இதுவரைக் கிடைக்கவில்லை. எனினும், படைப்பின் பொருண்மை யாகிய பிறன்மனை நயத்தல் உலகம்தழுவியதாக மேலெழுகின்றது. திருக்குறளில் நேரடியாகவே கண்டிக்கப்படகின்ற விடயம் திருமந்திரத்தில் ஆலோசனை கூறிக் கண்டிக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் இவை இரண்டும் எழுந்த காலத்திற்கிடையே வேறுபாடு காணப்படவே செய்கின்றது. திருவள்ளுவர் ஒரு அதிகாரத்தினை ஒதுக்கி விடயத்தினை முன்வைக்க, திருமூலர் மூன்று பாடல்களில் உதாரணம்காட்டி தெளிவுபடுத்துகின்றார். இத்தகைய பொருண்மை ஆண்மகனைக் கண்டிக்கின்ற தன்மையில் இருந்தபோதும் பெண்டீரையும் அது கண்டித்தே செல்கின்றது. இந்தவகையில் ஆண்மகன் தன்னை உணரவேண்டிய அதேநேரம், தான் கைப்பிடித்த மனைவியையும் நினைத்துப்பார்க்கவேண்டும். அவளும் உணர்ச்சியால் தூண்டப்பட்டவள் என்பதனை நினைவிற்கொண்டு செல்லவேண்டும். இங்கு ஒரு பெண்ணின் உணர்ச்சியினைப் கட்டுப்படுத்தி, அதனை வீட்டினுள்ளே மறைத்துப் பூட்டப்படுகின்றது. அதாவது, ஆனின் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுகின்றாள். இதனால் இவள், அடங்கியிருந்தே வாழ்க்கையினை முடித்தக்கொள்கின்றாள். எனவே, இப்பொருண்மை, பெண்ணிய நிலையில் அடக்கப்பட்ட ஒருவளாக இருந்து, ஆனின் இச்சைக்கு இடம்கொடுக்கின்ற ஒருவளாக இருப்பது கண்டுகொள்ளப்படுகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**


1. கௌமாரீஸ்வரி,S. (2003).திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
2. சாமிநாதையார், உ.வே.(1947). குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை.
3. சோமசுந்தரம்,மி.ப. (2009). சித்தர் இலக்கியம் ஆய்வுநூல் – 6, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை.
4. பாலசுப்பிரமணியம், சிற்பி. (2022).திருக்குறள் (கவிஞர் சிற்பி உரை)தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிட் சென்னை.
5. புலியூர் கேசிகள், (2010). நாலடியார், சாரதா பதிப்பகம், சென்னை.